# வருகிறவர்

*இயேசு சிலுவையில் அறையப்படுவதற்குச் சற்று முன்னதாகத் தமது சீஷர்களிடத்தில், "... ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்" (யோவா. 14:2, 3) என்று கூறினார். அவர் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட உடனேயே, இரு தூதர்கள் (''வெண்ணாடை அணிந்த மனிதர்கள்'') அவருடைய சீஷர்களிடம் தோன்றி, "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" என்றார்கள் (அப். 1:11).*

## இரண்டாம் வருகையைப் பற்றிய தவறான கருத்துக்கள்

*இரண்டாம் வருகை என்பது உறுதியான உண்மையாயிருந்தாலும், அதிகம் எதிர்பார்க்கப்படுகின்ற இந்த நிகழ்ச்சியைப் பற்றி எண்ணற்ற தவறான கருத்துக்கள் போதிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிறிஸ்தவரும் வேதாகமத்தின் அடிப்படையிலில்லாத யூகங்களினால் குழப்பமடையாத படிக்கு இயேசுவின் மறுவருகை பற்றிய வேதாகம போதனைகளைப் புரிந்து கொள்ள வேண்டும்.*[1]

### *"அவர் ஏற்கனவே வந்து விட்டார்"*

*கர்த்தருடைய நாள் ஏற்கனவே வந்து விட்டது என்ற தவறான கருத்தானது பவுலினால் தீவிரமாக எதிர்க்கப்பட்டது:*

> *அன்றியும், சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையையும், நாம் அவரிடத்திலே சேர்க்கப் படுவதையுங் குறித்து, நாங்கள் உங்களை வேண்டிக் கொள்ளுகிறது என்னவென்றால், ஒரு ஆவியினாலாவது, எங்களிடத்திலிருந்து வந்ததாய்த் தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது, கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகச் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும், கலங்காமலும் இருங்கள் (2 தெச. 2:1, 2).*

*மக்கள் கர்த்தருடைய நாள் "சமீபித்து"* (KJV) *இருந்தது என்றோ அல்லது "சமீபமாய்'' இருந்தது* (ASV) *என்றோ கூறவில்லை, ஆனால் கி.பி. 51ல்*

2 தெசலோனிக்கேயர் நிருபம் எழுதப்பட்ட காலத்தில் அது ஏற்கனவே வந்து விட்டது என்று கூறிக் கொண்டிருந்தனர்.

இந்தத் தவறான கருத்தானது கர்த்தருடைய நாள் "நிலை நின்றுள்ளது" என்றே நேரடி அர்த்தப்படுவதாக விளக்கும் ஏவப்பட்ட வசனமாகும், ஆனால் இது "வந்திருக்கின்றது" (NASB; RSV) என்று அதிக மென்மையாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதே வார்த்தையானது காணப்படும் 1 கொரி. 3:22 மற்றும் ரோமர் 8:38 ஆகிய இடங்களில் "நிகழ்காரியங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்விதமாக, 2 தெச. 2:2ல், கர்த்தருடைய நாள் வந்திருந்தது, அதாவது அது ஏற்கனவே உண்மை நிலையாய் இருந்தது என்பது மிகச் சரியான மொழிபெயர்ப்பாய் இருக்கும்.

கர்த்தருடைய நாள் நிகழ்கால உண்மையாய் இருந்ததென்று முதல் நூற்றாண்டில் வாதிட்டவர்கள் அந்த மாபெரும் நாளானது ஆகாயத்தில் கர்த்தரின் காணும் தோற்றத்துடனிருக்கும் என்பதை அறியாதிருந்தனர் (அப். 1:9-11). மேலும் அவர்கள் கர்த்தருடைய நாளுக்கு முன்னதாக விசுவாச விலக்கம் ஏற்பட வேண்டும் என்பதையும் அறியாதிருந்தனர் (2 தெச. 2:3).

**"அவர் உடனடியாக வருகிறார்"**

கிறிஸ்துவின் மறுவருகையைப் பற்றித் தெசலோனிக்கேயரிடம் இருந்த இன்னொரு தவறான கருத்து என்னவென்றால், கிறிஸ்துவின் வருகையானது உடனடியானதாக, மேல் தொங்குவதாக, பயமுறுத்துவதாக இருக்கும் என்பதேயாகும். "நிகழ்கால உண்மை நிலை" என்ற பிழையான கருத்தை மறுத்துரைப்பதில் பவுல், இரண்டாம் வருகைக்கு முன்னர் என்ன நடக்க வேண்டும் என்பதைப் பற்றிப் பேசினார். கர்த்தருடைய நாள் கி.பி. 51ல் வந்திருக்க முடியாத அளவுக்கு பல நிகழ்ச்சிகள் அதில் அடங்கியுள்ளன (2 தெச. 2:1-12ஐக் காணவும்). கி.பி. 51க்குப் பின் மாபெரும் விசுவாச விலக்கம் நடந்திருக்கிறது உறுதி, ஆனாலும் அந்த விசுவாச விலக்கமானது கர்த்தருடைய நாள் வரைக்கும் இருக்கும் (2 தெச. 2:8). ஆகையால், கர்த்தருடைய நாள் எந்த ஒரு குறிப்பிட்ட தலைமுறையில் வருகிறது என்று ஒருவராலும் கூற முடியாது. அந்த நாள் திருடன் வருகிற விதமாய் வரும் (1 தெச. 5:1, 2); அதாவது, அது எதிர்பார்க்கப்படாததாகவும், திடீரென்று வருவதாகவும் இருக்கும். இந்தக் காரணத்தினால், கர்த்தருடைய வருகையின் உடனடித் தன்மை சான்றளிக்கப்பட முடியாது. உண்மையில், ஒரு குறிப்பிட்ட சந்ததியில் கர்த்தருடைய வருகை மேல் தொங்குவதாயுள்ளதென்று சிலர் போதிக்கும் பொழுது, அவர் அந்தத் தலை முறையில் வரமாட்டார் என்பதற்கு அப்போதனையே திடமான காரணமாய் இருக்கலாம். இயேசு, "அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்" (மத். 24:36) என்று கூறினார்; "நீங்கள் நினையாத நாழிகையில் மனுஷ குமாரன் வருவார்" (மத். 24:44) என்றும் அவர் கூறினார்.

***"அவர் மறுபடி வரும் பொழுது பவுல் உயிருடன் இருப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டார்"***

*கர்த்தர் வரும்பொழுது பவுல் உயிருடன் இருப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டார் என்பது சில மக்களின் கருத்தாக உள்ளது, இயேசுவின் வருகையைப் பற்றிய மூன்றாவது தவறான கருத்தாகும். பவுல் 1 தெச. 4:15ல் தன்மைப் பெயர்ச் சொல்லைப் பயன்படுத்துவதால் இப்படி அவர்கள் யூகிக்கின்றனர். அதே காரணத்தினால், கர்த்தர் வரும் பொழுது பவுல் மரித்திருக்கும்படி எதிர்பார்க்கப்பட்டார் என்றும் ஒருவர் முடிவு செய்ய முடியும், ஏனெனில் அவர் 1 கொரி. 6:14 மற்றும் 2 கொரி. 4:14 ஆகிய வசனங்களில் மரித்தோரிலிருந்து எழுப்பப்படுபவர்களை விவரிப்பதற்கும் தன்மைப் பெயர்ச் சொல்லையே பயன்படுத்தினார்.*

*உண்மையில், பவுல் தம்முடைய சொந்த நிலை பற்றி குறிப்பாக விவாதிக்கவில்லை. இருப்பினும் அவர், படிப்படியாக வளரக் கூடிய விசுவாச விலக்கம் பற்றிப் பேசினார். அந்த விசுவாச விலக்கமானது தீர்மானிக்கப்படாத ஒரு கால வரையறை வரைக்கும், அது தன் உச்ச வல்லமையை அடையும் வரைக்கும் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும். இதைப் பற்றிய பவுலின் விழிப்புணர்வானது, கர்த்தர் வரும் பொழுது அவர் தாம் உயிருடன் இருப்போம் என்று எதிர்பார்க்கவில்லை என்று அர்த்தப்படுத்தக் கூடும்.*

***"கர்த்தருடைய வருகையானது இரு நிலைகள் கொண்டிருக்கும்"***

*இன்றைய நாட்களில் சிலர், ஏழு வருட கால இடை வெளியில் எதிர்காலத்தில் காணக்கூடிய இரு வருகைகள் நடைபெறும் என்று இரண்டாம் வருகையைப் பற்றி உரிமைகோருவது இன்னொரு நான்காவதான தவறான கருத்தாகும். இயேசு தமது பரிசுத்தவான்களுக்காக parousia[2] என்ற வருகையில் வந்து, மரித்தோரை உயிர்ப்பித்து, உயிருள்ளவர்களை மறுரூபமாக்கி, பின்பு ஏழு ஆண்டுகள் கழித்து தமது பரிசுத்தவான்களுடன் தமது epiphaneia என்ற வருகையில் மறுபடியும் தோன்றுவார் என்று கூறப்படுகின்றது. இந்தத் தவறான உபதேசத்தின்படி, இயேசுவின் இவ்விரண்டு வருகைகளுக்கும் இடைப்பட்ட ஏழாண்டுக் காலத்தில் பரிசுத்தவான்கள் மகிமை சூழ்ந்த பரவசத்தில்[3] வாழ, பெரும் துன்பத்தில் இப்பூமியின் மீது குழப்பம் நிறையும் எனப்படுகின்றது. ஏழு ஆண்டுகளின் முடிவில், கர்த்தர் தமது epiphaneia என்ற வருகையில் பூமிக்குத் திரும்பி ஆயிரம் ஆண்டு அரசாட்சியைத் தொடங்கி வைத்து, அதன் முடிவில் மரித்த துன்மார்க்கரை எழுப்புவார் என்றும் கூறப்படுகின்றது.*

*இந்தக் கோட்பாட்டிற்கான ஆதரவு மூல வார்த்தைகளில் தேடப் படுகின்றது. கர்த்தருடைய வருகையின் இரண்டு நிலைகளை விவரிப்பதற்குப் பரிசுத்த ஆவியானவர் parousia மற்றும் epiphaneia என்ற இரு வார்த்தைகளை விசேஷமாக ஏவுதல் செய்தார் என்று கூறப்படுகின்றது. இருப்பினும், parousia என்ற வார்த்தையானது மனித வருகை தொடர்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது (2 கொரி. 7:6), பாவ மனுஷனுடைய வருகை (2 தெச. 2:9), பெத்லகேமில் கர்த்தருடைய முதலாம் வருகை (2 பேது. 1:16)*

மற்றும் உலகத்தின் முடிவில் கர்த்தருடைய இரண்டாவது வருகை (1 கொரி. 15:23) ஆகியவற்றிற்கும் இவ்வார்த்தையானது பயன்படுத்தப் பட்டுள்ளது. ஆகையால், ஒருவர், parousia என்ற வார்த்தையானது கர்த்தருடைய இரண்டாம் வருகையின் நிரூபணமற்ற முதல் நிலையை விவரிக்க ஆவியானவரால் ஏவப்பட்டுள்ளதென்று முறைப்படி உறுதிப்படுத்த முடியாது.

அது போலவே, epiphaneia என்ற வார்த்தையும் கூட பெத்லகேமில் கர்த்தருடைய முதலாம் வருகையைப் பற்றிக் கூறுவதற்கும் (2 தீமோ. 1:10) மற்றும் உலக முடிவில் அவரது இரண்டாம் வருகையைப் பற்றிக் கூறுவதற்கும் (1 தீமோ. 6:14) பயன்படுத்தப்படுகின்றது. ஆகையால் epiphaneia என்ற வார்த்தையானது கர்த்தருடைய இரண்டாம் வருகையின் நிரூபணமற்ற இரண்டாம் நிலையை விவரிக்க ஆவியானவரால் ஏவப்பட்டுள்ள நுட்பமான வார்த்தையென்று உறுதிப்படுத்துவதும் சரியற்றதாக உள்ளது.

அத்துடன், இயேசு உண்மையில் தமது பரிசுத்தவான்களுடன் வரும் parousia வருகையை இந்தத் தவறான கோட்பாடானது இயேசு தமது பரிசுத்தவான்களுக்காக வருவார் என்று கூறுகின்றது (1 தெச. 3:13; 4:14). கர்த்தருடன் வரும் பரிசுத்தவான்கள் (கிரேக்கம்: hagioi, “பரிசுத்தவான்கள்”) தூதர்களாயிருக்கலாம் (2 தெச. 1:7; யூதா 14), அல்லது சரீரத்தில் எஞ்சியுள்ளவர்கள் உடன் இணைந்து மறுரூபமாக்கப்படுவதற்குத் திரும்பி வரும் மரித்த கிறிஸ்தவர்களின் ஆவிகளாயிருக்கலாம். அவர்கள் தூதர்களோ அல்லது தேவனுடைய மரித்த பிள்ளைகளின் ஆவிகளோ, அவர்களது வருகையானது parousiaவிலிருந்து மாறுபட்ட epiphaneiaவாக இருக்கும் என்பதற்கு போதனை எதுவும் இல்லை.

1 தெச. 4:16ல் உள்ள “கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள்” என்ற சொல் விளக்கமானது தவறாகக் கோட்பாடுப் படுத்தப்பட்டபடி கிறிஸ்துவுக்குப் புறம்பே மரித்தவர்கள் என்பதற்கு வேறுபட்ட தோற்றமுடையதல்ல. மாறாக, பவுல் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களைக் கிறிஸ்துவுக்குள் வாழ்பவர்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டினார் (1 தெச. 4:15). இந்த சந்தர்ப்பப் பொருளில், பவுல் கிறிஸ்தவர்களைப் பற்றி மட்டும் கலந்துரையாடினார். மரித்த கிறிஸ்தவர்கள் கர்த்தருடன் சேருவதற்கு முந்தி உயிருள்ள கிறிஸ்தவர்கள் அவ்விதம் செய்வதற்கு இப்பூமியை விட்டுப் போக மாட்டார்கள் என்று அவர் கூறினார். 1 தெச. 4ஆனது, உயிருடனோ அல்லது மரித்தோ, கிறிஸ்துவுக்குப் புறம்பே இருப்பவர்களைக் காணாது விடுகின்றது.

## இரண்டாம் வருகையின் சிறப்பியல்புகள்

**ஒரு முன் தேவை**

ஏற்கனவே இருக்கின்ற அக்கிரமமானது வளர்ச்சியுற்றிருப்பதென்பது இரண்டாம் வருகையில் முன் தேவை என்று பவுல் உறுதிப்படுத்தினார். பவுல் எழுதிய காலத்தில் கட்டுப்பாட்டிற்குள் இருந்த இந்த இயக்கமானது

*கவனிக்கத் தக்க அளவில் வளரும், ஆனால் அது கர்த்தருடைய இரண்டாம் வருகையில் அழிக்கப்படும் (2 தெச. 2:1-12).*

*அக்கிரமத்தின் இரகசியம், பாவமனுஷன் பவுலின் நாட்களில் ஏற்கனவே இயங்கிக் கொண்டிருந்தன. நிச்சயமாகவே இவன் வந்திருந்த சிலரில் 1 யோவான் 2:18ல் குறிப்பிடப்பட்டிருந்த அந்தி கிறிஸ்துக்களில் ஒருவனாக இருந்தான். 2 தெச 2ல் உள்ள மூர்க்கமான விசுவாச விலக்கமானவன் கிறிஸ்துவை எதிர்த்து நிற்கும் (அந்தி கிறிஸ்துவின்) பல குணங்கள் கொண்டிருந்தான். அவன் பாவத்தின் சாயலாய் இருந்தான், இயேசுவோ நீதியின் சாயலாய் இருந்தார். அவன் கேட்டின் மகனாய் இருந்தான், கிறிஸ்துவோ ஜீவாதிபதியாய் இருந்தார் (அப். 3:15). அவன் தேவனை எதிர்த்தான், கிறிஸ்துவோ பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்தார்.*

*பாவ மனுஷனும், நீதியின் மனுஷனும் ஆகிய இருவருமே இரகசியத்தை உடையவர்கள் என்று விவரிக்கப்படலாம் (2 தெச. 2:6-8; 1 தீமோ. 3:16), அற்புதங்கள் செய்யலாம் (2 தெச. 2:9; யோவா. 5:19, 20) மற்றும் ஒரு parousiaவைக் கொண்டிருக்கலாம் (2 தெச. 2:8, 9). இருப்பினும் பாவ மனுஷன் கர்த்தருடைய parousiaவின் வெளிச்சத்தில் வாசம் பண்ண முடியாது; அவன் கொலை செய்யப்படுவான்.*

*பாவமனுஷனுக்கான பல அடையாளங்கள் யோசனையாகத் தரப்பட்டுள்ளன; பலர் நீரோவைக் குறிப்பிட்டுள்ளனர். கி.பி. 68ல் அவன் மரணமடைந்த போது, சிலர் பவுலின் முன்னுரைத்தலில் இருந்த கேட்டின் மகன் அவன்தான் என்ற தங்களின் கருத்தை விட்டு விட மறுத்தனர். "மீண்டும் உயிர் பெற்ற நீரோ" என்ற புனை கதை எழும்பிற்று, அவன் மறுபடியும் உயிர் பெற்று கிறிஸ்தவர்களைத் தொடர்ந்து துன்புறுத்துவான் என்று அக்கதை கூறியது. இதற்கு மாறாக, நீரோவும் மற்றும் இன்னொரு வேட்பாளரான கலிகுலா (இவன் எருசலேம் தேவாலயத்தில் தனது உருவச் சிலையை நிறுவியவன்) என்பவனும் ஆகிய இருவருமே கர்த்தர் வரும்பொழுது அதிகாரத்தில் இருக்க மாட்டார்கள் என்பதால் தகுதியிழந்தவர்களாகின்றனர். பவுலினால் தீர்க்கதரிசனமாய்க் கூறப்பட்ட அக்கிரமமானது கர்த்தருடைய வருகையில் ஒழிக்கப்படு மட்டும் நிலைத்திருக்கும். இது போலவே இன்னும் பெயர் குறிக்கப்பட்ட மற்றவர்களும் இயேசு திரும்பி வரும் பொழுது அதிகாரத்தில் இருக்க மாட்டார்கள் என்பதால் (கேட்டின் மகன் எனப்படுவதிலிருந்து அவர்கள்) நீக்கப்படுகின்றனர்.*

*பாவமனுஷனைத் தடை செய்திருந்த முகமையின் அடையாளம் பற்றியும் பல்வேறு வகையில் கூறப்பட்டுள்ளது. பவுல் தாமே தடை செய்கிறவராய் இருந்தார் என்று சிலர் கருதியுள்ளனர். மற்றவர்கள் எல்லா அப்போஸ்தலர்களையும் உள்ளடக்கியிருக்கின்றனர். 2 தெச. 2:7ல் உள்ள சொற்றொடரை, போப்பின் உதயத்தைக் கட்டுப்படுத்த ஜெர்மன் பேரரசு அல்லது ரோமப் பேரரசு மேற்கொண்ட முயற்சிகளைக் குறிப்பதாக ஒரு சிலர் விளக்கப்படுத்தியுள்ளனர். கி.பி. 476ல் ரோமப் பேரரசு வீழ்ந்த பிறகு ரோமானிய மூப்பர்கள்/ஆயர்கள் தங்கள் அதிகாரப் பசிக்கு அடிமை களாயினர். தடை செய்பவனைப் பற்றி இரண்டாம் நூற்றாண்டில்*

தெர்த்துல்லியன் பின்வருமாறு விளக்கம் அளித்தார்: "ரோம அரசைத் தவிர வேறு தடையெது உள்ளது ... ?"[4] மேலும் அவர் பின்வருமாறு கூறினார்.

> பேரரசர்களுக்காக நாம் நமது ஜெபத்தை ஏறெடுக்க இன்னு மொரு மற்றும் மாபெரும் அவசியமும் உள்ளது, ... ஏனெனில் முழு பூமியின் மீதும் வல்லமையுள்ள அதிர்ச்சியொன்று வரக் காத்திருக்கிறது என்று நாம் அறிகின்றோம் - உண்மையில், எல்லாவற்றின் முடிவும் பயங்கரம் நிறைந்த சாபங்களினால் பயமுறுத்துகின்றது - ரோமப் பேரரசு மட்டுமே தொடர்ந்து நிலைத்திருப்பதனால் திருப்பித் தாக்கக் கூடியதாயுள்ளது.[5]

அடையாளப்படுத்தப்படாத தடை செய்பவன்(ர்) நீக்கப்பட்ட பிறகு, பாவமனுஷன் வல்லமை பெற வேண்டும். அவனது வல்லமையானது கிறிஸ்துவின் வருகை வரையிலும் இருக்கும், அவரது வருகையில் அவன் அழிக்கப்படுவான் (2 தெச. 2:8).

### குற்றப்படுத்தப்பட முடியாத கிறிஸ்தவர்கள்

கர்த்தருடைய நாளில் இயேசுவின் பணியானது முற்றிலும் அழிப்பதாயிருக்காது. எல்லா யுகங்களிலும் மீட்கப்பட்ட பரிசுத்த வான்களை அவர் பெற்றுக் கொள்வது/ஏற்றுக் கொள்வது என்பது அவரது (மறு) வருகையின் மகிழ்ச்சியான அம்சமாய் இருக்கும். மீட்கப்பட்டவர்களின் கூட்டத்தில் தெசலோனிக்கேயர்களும் இருக்க வேண்டும் என்று பவுல் விரும்பினார். அவர்கள் "முற்றிலும்" பரிசுத்தமாக்கப் படுவதற்காக அவர் ஜெபித்தார், பின்பு அவர் தமது ஜெபத்தை மீண்டும் ஏறெடுத்தார்: "உங்கள் ஆவி, ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் parousiaவின் போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப் படுவதாக" (1 தெச. 5:23). அவர் தமது சக கிறிஸ்தவர்கள் தங்களை சரியான விஷயத்திற்கு முற்றிலும் அர்ப்பணிக்க விரும்பினார்; மற்றும் அவர்கள் குற்றம் சாட்டப்படுத்தப்பட முடியாத அந்நிலையிலேயே மரித்து விட வேண்டும் அல்லது கர்த்தர் வரும் பொழுது அந்நிலையிலேயே அவர்கள் வாழ வேண்டும் என்று அவர் விரும்பினார்.

### மனம் மாறியவர்கள் கிரீடங்களாகும் நிலை

மற்ற காரணங்களுடன் கூட, பவுல் தமக்கு மிக அன்பானவர்களான பிரியமுள்ள தெசலோனிக்கேயரைக் காண முடியும் என்பதாலும் அவர் கர்த்தருடைய வருகையை ஆவலுடன் எதிர்நோக்கினார். விக்கிரகங்களிடமிருந்து உண்மையான தேவனிடம் திரும்பியிருந்த மக்களுடன் அவர் மறுபடியும் ஒன்று சேர்வார் என்ற அறிவே அந்த எதிர்பார்ப்பில் அவருக்குள் மகிழ்ச்சியை நிறைத்தது. ஒலிம்பிக் பந்தயத்தில் வெற்றியாளர் மலர்களால் ஆன மாலை ஒன்றைப் பெறுவது போல, கர்த்தருடைய நாளில் தெசலோனிக்கேயர்கள் பவுலின் மகிழ்ச்சியின் கிரீடமாய் இருப்பார்கள் என்று பவுல் கூறினார் (1 தெச. 2:19).

மனம் மாறியவர்கள் கிரீடங்கள் ஆவதுடன், 1 தெச. 2:19ன் குறிப்பிடத்

*தக்க அம்சமானது அந்த மனமாறியவர்கள் யார் என்பதைப் பவுல் அறிவார் என்ற அடிப்படையில் அமைந்த யூகமாகத் தோன்றுகின்றது. கல்லறைக்கு அப்பாலும் தனிப்பட்ட முறையில் அடையாளம் கண்டு கொள்ளுதல் என்பது வேதாகமத்தின் கருத்தாகும். ஒருவருடைய சரீரம் எஞ்சி வாழ்வதில்லை, ஆனால் நினைவுகூரும் திறமையானது எஞ்சியிருக்கின்றது.*

**தேவ கோபம்**

*மீட்கப்பட்டவர்களின் மகிழ்ச்சி மற்றும் சந்தோஷத்துடன், துன்மார்க்கர் மற்றும் கீழ்ப்படியாதவர்கள் மேல் தேவ கோபாக்கினையும் கூட கிறிஸ்துவின் இரண்டாம் வருகையுடன் தொடர்பற்றுப் போக முடியாததாக உள்ளது (1 தெச. 1:10; 4:6; 5:3; 2 தெச. 1:8, 9; 2:8). வேசித்தனத்தைப் பற்றிச் சபை உறுப்பினர்கள் எச்சரிக்கப்பட்டனர், அப்படிப்பட்ட துன்மார்க்கத்தைச் செயல்படுத்தும் அனைவர் மேலும் கர்த்தர் ஆக்கினை செலுத்துகின்றவராய் இருக்கின்றார் என்று புத்தி கூறப்பட்டது. மற்றும், கர்த்தர் கணக்குக் கேட்க மாட்டார் என்ற நினைவில் வாழும் மக்கள், ஒரு பெண்ணுக்குப் பிரசவ வலிகள் திடீரென்று உண்டாவது போல, திடீரென்று ஏற்படும் அழிவுக்கென்றே விழித் தெழுவார்கள், மற்றும் அங்கு தப்பிக்க வழியெதுவும் இருக்காது. சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய மறுப்பவர்கள்மேல் நித்திய அழிவாகிய தண்டனை வரும்.*

*''அழிவு'' என்ற வார்த்தை நேரடியாக அர்த்தம் எடுத்துக் கொள்ளப்படக் கூடாது. பாவிகள் உண்மையில் அழிக்கப்பட்டு, இல்லாமல் ஆக்கப்பட்டுவிட்டால், அவர்களுக்குக் கொடுக்கப்படும் தண்டனையானது நித்தியமானதாக இருக்க முடியாது; அது ஒழிந்து போய்விடும். இதன் விளைவாக, 2 தெச. 1:7-10ல் உள்ள "அழிவு" என்ற வார்த்தையானது வாதைகள் என்பதற்குச் சமமானதாக உள்ளது. குற்றம் செய்தவர்கள் நிரந்தரமான துன்பத்தில் இருப்பார்கள், ஆனால் அவர்கள் ஒருபொழுதும் அழிக்கப்பட மாட்டார்கள்.*

*''மரணம்'' என்பது பிரிவு என்று விவரிக்கப்படுகின்ற பொதுவான கருத்தானது தன்னில் சில சத்தியம் கொண்டதாக உள்ளது. உண்மையில் மரணம் என்பது உயிரற்ற நிலையாக உள்ளது. தேவ கோபாக்கினையினால் பாதிக்கப்பட்டவர்கள் அவருடைய சமூகத்திலிருந்து பிரிக்கப்பட்டு மரணம் ("இரண்டாம் மரணம்"; வெளி. 20:14) என்று அழைக்கப்படப் போதுமான அளவு பெருந் துக்கமாக உள்ள நித்திய அக்கினியில் துன்பப்படுவார்கள், ஆனால் இது சொல்லர்த்தமாக மரணம் என்று இருப்பதில்லை. குற்றவாளிகள் இன்னமும் உயிருடன் இருப்பார்கள். அவர்கள் (வெளி. 9:6ல் உள்ளவர்கள் போன்றவர்கள்) சந்தேகமின்றி நரக நெருப்பிலிருந்து ஒரு விடுதலை என்ற வகையில் மரணத்தைத் தேடுவார்கள், ஆனால் மரணமானது அவர்களை விட்டு ஓடும்.*

குறிப்புகள்

*[1]இன்னும் ஆழமான கற்றல் ஒன்றுக்கு இன்றைக்கான சத்தியத்தின் "கடைசி விஷயங்கள்" என்ற இதழில் (ஜன. 1998) உள்ள "இயேசுவின் மறுவருகை" மற்றும் "இயேசுவின் மறுவருகை பற்றிய கள்ள உபதேசங்கள்" என்ற தலைப்பில் உள்ள* Owen Olbricht *அவர்களின் பாடங்களைக் காணவும். [2]கண்ணால் காணப்படக் கூடிய அளவில் உள்ள (கர்த்தரின்) இரு வருகைகளுடன் - அவரது பிறப்பு மற்றும் அவரது இரண்டாம் வருகை ஆகியவற்றுடன் - குழப்பிக் கொள்ளாதபடிக்கு காணப்பட முடியாத மூன்று "வருகைகள்" உள்ளன: (1) சபை நிலைநாட்டப்பட்ட பொழுது (மத். 10:23; 16:28ஐக் காணவும்); (2) எருசலேமின் அழிவு (1 பேது. 4:7; யாக். 5:7; மத். 26:64ஐக் காணவும்); மற்றும் (3) ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் (யோவா. 14:23; பிலி. 4:5). காணக்கூடிய அளவில் உள்ள (இயேசுவின்) இரண்டாம் வருகையானது பொதுவாக "இரண்டாம் வருகை" என்று அழைக்கப்படுகின்றது. இது அவருடைய parousia எனப்படுவதுடன், இந்த எதிர்கால நிகழ்வானது அவருடைய apokalupsis ("வெளிப்படுத்துதல்"; 2 தெச. 1:7-10; 1 பேது. 1:3-13); அவரது epiphaneia ("தோற்றம்"; 1 தீமோ. 6:14); மற்றும் he hemera kuriou ("கர்த்தருடைய நாள்"; 2 தெச. 2:2) என்றும் அழைக்கப்படுகின்றது. வேறுவார்த்தைகளில் சொல்லுவதென்றால், அவரது parousia, அவரது apokalupsis மற்றும் அவரது epiphaneia ஆகியவை he hemera kuriouக்காக கால அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன (1 கொரி. 1:7, 8; 2 தெச. 2:1, 2, 8). [3]கர்த்தருடன் இருக்கச் செல்லுதலை ஒருவர் பரவச நிலை என்று விவரிக்கலாம், ஆனால் அது பவுலைப் பொறுத்தமட்டில் ஏழு ஆண்டுக் காலமாய் இராமல், கர்த்தருடன் "என்றென்றும்" இருத்தல் என்பதாகவே உள்ளது (1 தெச. 4:17).* [4]Tertullian *On the Resurrection of the Flesh* 24. Alexander Roberts and James Donaldson, eds., *The Ante-Nicene Fathers: Translations of the Writings of the Fathers down to A.D. 325,* rev. and arr. A. Cleveland Coxe (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1957). [5]Tertullian *Apology* 32.

*Parousia (1 தெச. 2:19; 3:13; 4:15; 5:23; 2 தெச. 2:1, 8) என்ற வார்த்தையானது "பக்கத்தில் இருத்தல்" என்று அர்த்தப்படுகின்ற கூட்டு வார்த்தையாகும். எனவே "பிரசன்னம்" என்பதே மிகச் சரியான மொழி பெயர்ப்பாக உள்ளது (பிலி. 2:12; 2 கொரி. 10:10). பிரசன்னமாகுதலுக்கு வருகையொன்று அவசியமாய் இருந்தால், parousia என்பது "வந்து சேருதல்" அல்லது "வருகை" அல்லது "வருதல்" என்று அர்த்தப்படலாம். தீத்து பவுலிடம் வந்தது parousia (2 கொரி. 7:6) என்று அழைக்கப்படுகின்றது. பாவ மனுஷன் வந்து சேருதல் parousia (2 தெச. 2:9) என்று அழைக்கப்படுகின்றது. பெத்லகேமில் இயேசு வந்ததும் (2 பேது. 1:16) மற்றும் உலக முடிவில் அவரது வருகையும் (1 கொரி. 15:23) கூட அவரது parousia என்ற குறிப்பிடப்படுகின்றன.*